DINAKARAN 10 FEB 2010

# ஈஷா யோக மையத்தில் மகாசிவராத்திரி விழா

கோவை,பிப்.10: கோவை பூண்டி ஈஷா யோக மையத்தின் 16 வது சிவராத்திரிவிழா வரும் 12 ம் தேதி இரவு கொண்டாடப்படுகிறது. மாலை 6 மணிமுதல் அடுத்தநாள் காலை 6 மணிவரை நிகழ்ச்சிகள் நடக்கிறது.

இது குறித்து ஈஷா யோகமைய நிர்வாகி சுவாமி திருதமா கூறியதாவது:

மகாசிவராத்திரி நாளன்று கோள்களின் அமைப்பானது ஒரு குறிப்பிட்ட நிலையில் இருக்கிறது. இதனால், மகாசிவராத்திரி ஒரு மனிதனின் ஆன்மவளர்ச்சிக்கு இயல்பாகவே உறுதுணையாக உள்ளது. ஈஷாவில் ஆண்டுதோறும் நடைபெறும் சிவராத்திரிவிழாவில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அன்பர்கள் லட்சக்கணக்கில் பங்கேற்கின்றனர். கடந்த ஆண்டு 10 லட்சம் பேர் பங்கேற்றனர். இந்த ஆண்டு மேலும் கூடுதல் அன்பர்கள் வருவார்கள் என எதிர்பார்க்கிறோம்.

ஈஷா யோக மையத்தின் 16 வது ஆண்டு சிவராத்திரிவிழா வரும் 12 ம் தேதி இரவு கொண்டாடப்படுகிறது. மாலை 6 மணிமுதல் அடுத்தநாள் காலை 6 மணிவரை நிகழ்ச்சி நடக்கிறது. இந்த ஆண்டு ஈஷா தியானலிங்க வளாகத்தில் நாத ஆராதனை, நடன ஆராதனையுடன் விழா துவங்குகிறது. மகாசிவராத்திரி விழாவின் முக்கிய நிகழ்வாக சத்குரு அருளுரை நடக்கிறது. விழாவில் பண்டிட் சவுராசியா, ஆனந்தன் சிவமணி, மிடிவல் பண்டிட் ஆகியோரின் இசைநிகழ்ச்சி நடக்கிறது. கிராமப்புற கலைநிகழ்ச்சி மற்றும் சவுண்ட்ஸ் ஆப் ஈஷா இசை முழக்கம் நடக்கிறது. நள்ளிரவில் சந்தியா காலவேளையில் சத்குரு ஜக்கிவாசுதேவ் தலைமையில் மகாமந்திர உச்சாடனை நடக்கிறது. கலைபொருட்கள் ஆடை அணிகலன்கள் உணவு பொருட்கள் விற்கும் அரங்குகள் பொழுதுபோக்கு அம்சங்கள் இடம் பெறுகிறது. இரவு அன்னதானம் நடக்கிறது. இரவு முழுக்க சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுகிறது. இவ்வாறு சுவாமி திருதமா தெரிவித்தார்.